Dinakaran 28/10/07



பேரூராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்ட ஆட்சியர்களிடம் வீடியோ கான்பரன்சிங் மூலம் திட்டப்பண குறித்து உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று கேட்டறிந்தார். சென்னை தலைமை செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் நகர மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் தீனபந்து, பேரூராட்சிகள் இயக்குனர் கோபால்.

### அண்ணா மறுமலர்ச்சி திட்டம்

# வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஸ்டாலின் ஆய்வுக் கூட்டம்

சென்னை, அக்.28: பேரூராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சி திட்ட செயல்பாடுகள் குறித்து, கலெக்டர்களுடன் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

கோட்டையில் நேற்று வீடியோ கான்பரன்ஸ் முறையில், கலெக்டர்களுடன் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேரூராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சி திட்ட செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார். கோட்டையில் உள்ள தேசிய தகவலியல் மையத்தில் இருந்து வீடியோ கான்பரன்ஸ் மூலம் கோவை, ஈரோடு, கன்னியாகுமரி கலெக்டர்களுடன் ஸ்டாலின் பேசினார். மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகள் பற்றி கேட்டறிந்தார்.

கோவை கலெக்டர் நீரஜ் மிட்டல், ஈரோடு கலெக்டர் உதயச்சந்திரன், கன்னியாகுமரி கலெக்டர் ஷன் சோங்காம் ஜடக்சிரு மற்றும் மண்டல பேரூராட்சி உதவி இயக்குனர்கள், மாவட்ட அதிகாரிகள், செயல் அதிகாரிகள் பங்கேற்றனர். தஞ்சை மாவட்டம் சார்பில் திட்ட அதிகாரி ராஜாமணி பங்கேற்றார்.

பேரூராட்சிகளில் தூய்மை, பசுமைப்படுத்தும் நடவடிக்கை, குப்பைகள் இல்லாத நிலை உருவாக்குதல் குறித்து கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆண்டு 140 பேரூராட்சிகளில் ரூ.70 கோடி மதிப்பீட்டிலும், பிற துறை திட்டங்களுடன் ஒருங்கிணைந்து ரூ.85 கோடி மதிப்பீட்டிலும் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஈரோடு மாவட்டத்தில் 14 பேரூராட்சிகளில் ரூ.15,85 கோடியிலும், கோவையில் 13 பேரூராட்சிகளில் ரூ.9.46 கோடியிலும், தஞ்சையில் 6 பேரூராட்சிகளில் ரூ.13.92 கோடியிலும், கன்னியாகுமரியில் 14 பேரூராட்சிகளில் ரூ.12.95 கோடியிலும் பல்வேறு பணிகள் நடந்து வருவது பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது.

இதுபோல வீடியோ கான்பரன்ஸ் முறையில் கலெக்டர்களுடன் கலந்தாய்வு கூட்டம் மாதம் 2 முறை நடத்தப்படும் என்று அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார். நகராட்சி நிர்வாக செயலர் தீனபந்து, பேரூராட்சிகளின் இயக்குனர் கோபால், இணை இயக்குனர் மதிவாணன் உடன் இருந்தனர்.

---

நாளை

## நாடு தழுவி
## அஞ்சல் ஊ

சென்னை, அக்.28: ம
அரசு ஊழியர்களு
இடைக்கால நிவார
வழங்க வேண்டும்
பது உட்பட பல்
கோரிக்கைகளை வ
றுத்தி, நாளை மறுதி
நடக்கும் வேலை நி
தத்தில் அஞ்சல் து
ஊழியர்களும் பங்
கின்றனர்.

இதுகுறித்து, அ
துறை கூட்டுப் போர
டக் குழு நிர்வாகி
நூர்அகம்மது நேற்று வெ
யிட்ட அறிக்கை: பு
ஓய்வூதியக் கொள்கை
நாடு முழுவதும் லட்
ணக்கான தொழிலாளர்
பாதிக்கப்படுவார்கள்.
தத் திட்டத்தை கை
வேண்டும். 6வது ஊதி
குழு தன் பரிந்துரை
அளிக்கும் வரை இ
கால நிவாரணமாக ம
தோறும் ஆயிரம் ரூ